பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 16

இப்னு தைமிய்யா ﵀ வாழ்க்கைக் குறிப்பு 23

தமிழாக்குநர் உரை 27

அஷ்ஷெய்க் அல்-அல்பானீ ﵀ ஆய்வுரை 28

அறிமுகம் 31

1 அல்லாஹ்வை நினைவுகூர்வதின் சிறப்பு 35

2 காலை மாலை திக்ருகள் 42

3 உறங்கச் செல்லும்போது ஓத வேண்டியவை 50

4 தூக்கத்தில் இருந்து விழித்தவுடன் 53

5 தூக்கத்திலிருந்து விழித்து ஓதுபவை 57

6 நித்திரையின்போது திடுக்கிட்டெழுந்தால் 59

7 கனவுகண்டால் ஓதுபவை 60

8 இரவு வணக்கத்தின் சிறப்பு 62

9 வீட்டிலிருந்து வெளியேறும்போது 64

10 வீட்டினுள் நுழையும்போது ஓதுபவை 66

11 மஸ்ஜிதினுள் நுழையும்போதும் வெளியாகும்போதும் ஓதுபவை 68

12 பாங்கு, அதைக் கேட்பவர்கள் சொல்லுவதும் மற்றும் தொழுகையில் முதல் வரிசையின் சிறப்புகளும் 70

13 தொழுகையில் ஓதுபவை 75

14 இஸ்திகாரா – நன்மை வேண்டிப் பிரார்த்தித்தல் 95

15 கஷ்டம், கவலை, துக்கம் ஏற்பட்டால் ஓதுபவை 97

16 பகைவனை, அரசனைச் சந்திக்கும்போது ஓதுபவை 101

17 ஆதமுடைய மகனைக் குறுக்கிடும் ஷைத்தானுக்காக ஓதுவது 103
18 விதியை (களாவை) ஏற்று நடத்தல் 107
19 இன்ப துன்பங்களின்போது ஓதுபவை 109
20 துன்பம் நேர்ந்தால் ஓதுபவை 110
21 கடன் நிறைவேற ஓதுவது 112
22 நோய்க்கு ஓதிப்பார்த்தல் 113
23 கப்ருஸ்தானங்களில் நுழையும்போது ஓதுபவை 117
24 மழைக்காகப் பிரார்த்திக்கும்போது ஓதுபவை 118
25 கடுமையாகக் காற்று வீசும்போது ஓதுபவை 120
26 இடி இடிக்கும்போது ஓதுபவை 122
27 மழைபொழியும்போது ஓதுபவை 123
28 தலைப்பிறையைக் கண்டால் ஓதுவது 126
29 பிரயாணங்களின் ஓதல்கள் 127
30 ஓர் ஊரிலோ அல்லது நாட்டிலோ நுழைய நாடினால் ஓத வேண்டிய ஓதல்கள் 133
31 புதிய இடங்களில் தங்கினால் ஓதுவது 134
32 உண்ணல், குடித்தல் சம்பந்தமான ஓதல்கள் 135
33 விருந்தின்போது ஓதுபவை 139
34 ஸலாம் கூறுவது சம்பந்தமானவை 141
35 தும்மல் கொட்டாவி 144
36 திருமணம் 146
37 புதிதாகத் திருமணம் செய்தவரைக் கண்டால் 148
38 மனைவியுடன் உடலுறவு வைத்திருக்கும்போது 149
39 குழந்தை பிறந்தால் 150
40 சேவல் கூவினால், கழுதை கத்தினால், நாய் ஊளையிட்டால் ஓதுபவை 153
41 சபையின் ஒழுங்குகள் 154
42 கோபம் வந்தால் 157
43 பெரு நோயாளியைக் கண்டால் 158

44 கடைத்தெருவில் நுழைந்தால் 159
45 வாகனம் வீழ்த்தினால் 160
46 அன்பளிப்பை ஏற்றுக்கொண்டவர் பிரார்த்தித்தல் 161
47 தன்மீது படிந்த தூசியை மற்றவர் நீக்கினால் 162
48 முதல் கனியைக் கண்டால் 163
49 ஒரு பொருளைக்கண்டு வியப்படைந்தால் அல்லது கண்திருஷ்டிக்குப் பயந்தால் 164
50 சுபச்சொல்லும் பறவைச் சகுனம் பார்த்தலும் 166

இப்னு தைமிய்யா ﵀ வாழ்க்கைக் குறிப்பு



பெயரும் வமிசமும்

இமாம் இப்னு தைமிய்யா ﵀ அவர்களின் இயற்பெயர் அஹ்மது தகியுத் தீன் என்பதாகும். அபுல் அப்பாஸ் என்பது அவர்களின் குன்யா எனும் சிறப்புப் பெயராகும். அவர்களின் தந்தை அப்துல் ஹலீம் இப்னு அப்துஸ் ஸலாம் இப்னு அப்துல்லாஹ் இப்னு அபுல் காசிமுல் ஹிழ்ர் இப்னு முஹம்மது இப்னு அல் ஹிழ்ர் இப்னு அலீ இப்னு அப்துல்லாஹ் இப்னு தைமிய்யத்துல் ஹரானீ ஆவார்கள். இந்த நீளமான பெயர்ப் பட்டியல் இமாமவர்களின் தந்தையிலிருந்து தொடங்கிப் பின்னே செல்கின்ற அவர்களின் வமிசாவளி ஆகும்.

தைமிய்யா என்பது இவர்களுடைய பாட்டனாரின் தாயார் பெயராகும். அந்தத் தாய் உபதேசியாக இருந்தார்கள். அதுவே நாளடைவில் குடும்பப் பெயராய் ஒட்டிக்கொண்டது என்பது இப்னு அப்துல் ஹாதீ ﵀ அவர்களின் கருத்தாகும். மற்றொரு கருத்தாவது, இவர்களது பாட்டனார் முஹம்மது இப்னு ஹிழ்ர் அவர்கள் ஹஜ்ஜு செய்வதற்காகச் சென்றபோது தைமா என்ற பாலைவனப் பகுதியிலுள்ள ஒரு மலையடிவாரத்தில் குழந்தை ஒன்றைக் கண்டார். ஊர் திரும்பிய பின் அக்குழந்தையின் நினைவினாலேயே பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார்.அதை யா தைமிய்யா, யா தைமிய்யா என்று செல்லமாக அழைக்க அதுவே நாளடைவில் பட்டப்பெயராய் ஒட்டிக்கொண்டது.

பிறப்பும் கல்வியும்

ஹிஜ்ரீ 661 (கி.பி. 1263)இல் ரபீஉல் அவ்வல் பிறை 12 திங்கட் கிழமை துருக்கியிலுள்ள ஹர்ரான் என்ற ஊரில் இமாமவர்கள் பிறந்தார்கள். ஹிஜ்ரீ 667இல் தாத்தாரியர்கள் படையெடுத்து வந்தபோது இவரது குடும்பம் சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ் நகரை நோக்கி வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு அங்கேயே நிரந்தரமாகத் தங்கவும் செய்தது. இமாமவர்கள் தமது இருபதாம்

வயதை அடைவதற்குள்ளாகவே இஸ்லாமியப் பாடங்களை நடத்துவதற்கான, ஃபத்வா கொடுப்பதற்கான கல்வியை பல்வேறு அறிஞர்களிடம் அடைந்துகொண்டார்கள். 'சிறுவயதிலேயே முஸ்னது அஹ்மது எனும் நூலைப் பலமுறையும், பிரபலமான ஆறு பெரும் நூற்களையும், முஅஜமுத்தப்ரானீ கபீர் என்ற நூலையும் பிறர் படிக்க செவியேற்றுள்ளார்கள்' என இப்னு அப்துல் ஹாதீ ﵀ கூறுகிறார்.

ஹதீஸ்களைக் கேட்டு, படித்து, பிரதிகள் பல எடுத்தார்கள். பின் எழுத்து, கணக்கு இவற்றை ஆரம்பப் பாடசாலையில் கற்று குர்ஆனையும் மனனம் செய்தார்கள். பின்பு ஃபிக்ஹில் கவனம் செலுத்தினார்கள். இப்னு அப்துல் கவீ ﵀ அவர்களிடம் அறபு இலக்கணம் பயின்றார்கள். இமாம் சீபவைஹீயின் அறபு இலக்கண நூலையும் ஆய்வு செய்தார்கள். பின் தஃப்சீரை நோக்கித் தமது கவனத்தைத் திருப்பினார்கள். அதில் தேர்ச்சியும் பெற்றார்கள். பின்னர் உஸூலுல் ஃபிக்ஹை உறுதிப்படுத்தத் தொடங்கினார்கள். அப்போது அவர்களின் வயது இருபதுக்கும் கீழ்தான் இருந்தது. அவர்களின் அறிவுத்திறன், சிந்தனை ஓட்டம், மனன சக்தி, விரைவாக விளங்கிக் கொள்ளுதல் போன்றவற்றைக் கண்டு திமஷ்க் நகரமே வியந்தது. எந்தக் கல்வியாக இருந்தாலும், அதில் அவர்கள் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அந்ததந்த நூல்களில் உள்ளவற்றை எழுத்துமாறாமல் அப்படியே உள்ளதை உள்ளபடி மனனம் செய்பவர்களாக இருந்தார்கள். இது அல்லாஹ் அவர்களுக்குத் தந்த மாபெரும் அருளாகும். அவை அவர்களது உடலோடு ஒன்றியிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

அவர்கள் எதையும் இரவல் வாங்கிச் சொல்பவர்களாக இருக்கவில்லை. அவர்களது பெற்றோரும் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாகவும், சிறப்புகளில் தனித்தவர்களாகவும் இருந்தார்கள். எதார்த்தத்தில் இவர்களைப் போல் யாரும் இருக்கவில்லை. இவர் தமது வாழ்நாள் முழுவதும் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். இது மாபெரும் காலச்சுவடல்லவா? இவர்கள் அழகிய முறையில் எந்த ஒரு மஸ்அலாவாக இருப்பினும் அதில் நல்ல திறனாய்வு செய்து விடை சொல்பவர்களாகவும், உறுதியான ஆதாரத்தைத் தருபவர்களாகவும், எதையும் விரைவாக தெளிவுபடுத்துபவர்களாகவும் இருந்தார்கள். இவர்களது திறனாய்வு எந்த ஓர் அறிஞரையும் நிச்சயம் ஆச்சரியப்படவும், திடுக்கிடவும் வைக்கும் ஆற்றல் கொண்டது. அந்த அளவுக்கு குர்ஆன் ஹதீஸின்

சொற்களை விளங்கும் ஆற்றலை, அவை என்னென்ன நிலையில் உள்ளன என்று விரைவாக அறியும் ஆற்றலை அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருந்தான் என்று அல்பஸ்ஸார் ﷺ கூறுகிறார்கள்.

இவர்கள் பேணுதலுள்ளவர்களாகவும், உணவிலும் உடையிலும் நடுநிலையைக் கடைப்பிடிப்பவர்களாகவும், இறையச்சமுள்ளவர்களாகவும், தாய்க்குப் பணிவிடை செய்பவர்களாகவும், வணக்கசாலியாகவும், அல்லாஹ்வை அதிகம் நினைப்பவராகவும், அவனையே அதிகம் ஆதரவு வைப்பவராகவும், அவனுடைய ஏவல்களையும் விலக்கல்களையும் எடுத்து நடப்பவராகவும், கல்வித் தேடலில் வயிறு நிரம்பாதவராகவும், தாகம் தீராதவராகவும், சோம்பல் கொள்ளாதவராகவும் இருந்தார்கள்.

தொகுப்புகள்

இமாமவர்களின் தொகுப்புகள் அளவிட முடியாதவை. எனினும் அவற்றில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவோம்.

- அல்இஸ்திகாமத் (الاستقامة) - நிலைத்திருப்பது
- இக்திளாவு ஸிராத்தில் முஸ்தகீம் (اقتضاء الصراط المستقيم) - நேர் வழியைத் தேடுதல்
- பயானு தல்பீஸில் ஜஹ்மிய்யா (بيان تلبيس الجهمية) - ஜஹ்மிய்யாக்களின் குழப்பத்தைத் தெளிவுபடுத்துதல்
- அல்ஜவாபுஸ் ஸஹீஹ் (الجواب الصحيح) - கிறித்துவர்களுக்கான சரியான பதில்கள்
- தர்உ தஆருளுல் அக்லி வன் நக்லி (درء تعارض العقل والنقل) - சுயஅறிவும் ஆதாரங்களின் அறிவும் மோதிக்கொள்ளும் இடங்கள்
- ஸஃப்திய்யா (الصفدية) - உறுதியான கொடைகள்
- மின்ஹாஜுஸ் ஸுன்னத்தின் நபவிய்யா (منهاج السنة النبوية) - நபியின் வழமையான வழி
- அந்நபவாத் (النبوات) - உயர்ந்த சோதனைகள்

மரணம்

ஹிஜ்ரீ 728 (கி.பி. 1328) துல் கஅதா பிறை 23 திங்கள் இரவு திமஷ்க் கோட்டையில் மரணமடைந்தார்கள். மக்களின் கடுமையான கூட்ட

அஷ்ஷெய்க் அல்-அல்பானீ ﵀ ஆய்வுரை



எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அவனையே போற்றுகிறோம். அவனிடமே உதவி தேடுகிறோம். அவனிடமே பாவமீட்சி வேண்டுகிறோம். எங்கள் ஆத்மாக்களின் தீங்குகளிலிருந்தும் கெட்ட செயல்களிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். எவனை அல்லாஹ் நேர்வழியில் ஆக்கினானோ அவனைக் கெடுப்பார் யாருமில்லை எவனை அல்லாஹ் கெடுத்தானோ அவனை நேர்வழிப்படுத்த யாரும் இல்லை (யாராலும் முடியாது) வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என உறுதி கூறுகிறேன். அவன் தனித்தவன் இணையில்லாதவன் முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார் எனவும் உறுதி கூறுகிறேன்.

இஸ்லாமிய அச்சக (பேரூத், டமஸ்கஸ்) உரிமையாளரும் மதிப்பிற்குரிய பேராசிரியருமாகிய ஸுஹைர் ஷாவீஸ் அவர்கள் ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ﵀ அவர்களால் எழுதப்பட்ட அல்கலிமுத்தையிப் என்ற நூலைச் சுருக்கித்தரும்படி என்னிடம் வேண்டினார்கள். இவ்வேண்டுகோளை ஏற்று எழுதிக் கொடுத்ததை ஹி 1385 (1975)இல் முதல் பதிப்பை வெளியிட்டிருந்தார்கள். அதன் முன்னுரையில் வாசகர்களிடம் சில வார்த்தைகள் கூறி இருந்தோம். அந்நூலில் 16ஆம் பக்கத்தில் இந்நூலை வாசிப்பவர்கள் இதில் கூறப்பட்டுள்ளவை உண்மையான தூய்மையான களங்கமற்ற ஸஹீஹ் எனும் தரத்திலான நபிமொழிகள்தான் என உறுதிகொள்ளாது செயற்பட முனைய வேண்டாம் எனக் கூறியிருந்தோம். இதன்படிப் பரிசுத்தமான நபிமொழிகளை எடுத்துக்காட்டியிருந்தோம். அல்லாஹ் அதற்கான வழிகளை எமக்கு இலகுவாக்கித் தந்தான். ஆகவே, இப்பரிசுத்த நபிமொழிகளைக் கடைவாய்ப் பற்களினால் கவ்விப்பிடித்திடல் வேண்டும். சந்தேகம் ஏற்படின் விட்டுவிட வேண்டும். உறுதியுடனுள்ள செயற்பாடே வணக்க சாலிக்குத் தேவை. துதிகளுக்கும், பிரார்த்தனைகளுக்கும், அவ்ராது

களுக்கும், தூய நபிமொழிகளில் இலகுவானதை எடுத்து வழமைப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். அப் பொழுதுதான் அந்த வணக்கசாலி அல்லாஹ்வைத் துதிசெய்யும் ஆண்களும் பெண்களும் என்ற இலக்கை அடைவார்.

தூய்மையான நபிமொழிகளை மனிதர்களுக்கு அறிமுகப்படுத்து வதே சிறந்தது. அதுதான் அவர்களுக்கு இலகுவாகவும் பிரயோசன மாகவும் இருக்கும். அதனையே அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். பிரார்த்தனைகள், துதிகள், அவ்ராதுகள் ஆகியவற்றை அறிமுகப் படுத்தும் பல ஏடுகளில் நபிமொழி அல்லாதவையும், கற்பனை ஹதீஸ்களும் மலிந்துள்ளதைக் காணக்கூடியதாகவே இருக்கின்றன. அவற்றைத் தரம்பிரித்து எச்சரித்தும் எழுதியுள்ளோம். ஆகவே, தூய நபிமொழிகளையே இந்த ஏட்டில் அறிமுகப்படுத்தியுள்ளோம் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

இதற்காகவே நான் இந்தச் சமயத்தில் (தூய நபிமொழியை எடுத்துக்காட்டுவதில்) என் நூல்களை இயற்றியுள்ளேன். முதலா வதாக ஸஹீஹ் அபீதாவூது, ஸஹீஹ் தர்கீப் வத்தர்ஹீப் ஆகிய நூல்களை எழுத அல்லாஹ் இலகுவாக்கித் தந்தான். பின்னர் ஸஹீஹ் ஜாமீஉஸ்ஸகீர் நூலில் முதலாம், இரண்டாம் பாகங்கள் வெளிவந் தன. லயிப் ஜாமியுஸ்ஸகீர் நூலும் தொடர்ந்து வெளியாகியது. இதன்படி இஸ்லாமிய அச்சகத்தாருடன் இணைந்து அல்கலி முத்தையிப் என்ற நூலைப் புதிய வடிவில் ஸஹீஹ் அல்கலிமுத்தை யிப் என்ற பெயருடன் வெளியிடுகிறேன். இந்நூலில் களங்கமற்ற நபிமொழிகளை மட்டுமே எடுத்தாண்டுள்ளேன். பிரிவு என்ற சொல்லையும் நீக்கியுள்ளேன். நபிமொழி அறிவித்தவர் பெயரையும் ஆதார நூலின் பெயரையும் நீக்கியுள்ளேன். அப்படியும் அவை தன் தூய்மையை இழந்துவிடவில்லை.

அக்கலிமுத் தையிப் என்ற மூல நூலில் குறிப்பிட்ட நபிமொழி இலக்கங்களை மட்டும் கடைசியில் குறிப்பிட்டுள்ளோம். அதன் இஸ்னாத் (தொடர்)களை அறிவதற்கும், அதன் தரத்தைத் தெரிந்து கொள்ளவும் சேர்த்துள்ளோம். நீக்கப்பட்ட நபிமொழிகளையும் அதன் காரணத்தையும் மூல நூலில் காணலாம்.

இச்சிறு பணியை ஏற்றுக்கொள்ளவும், இதனால் முஸ்லிம் சமூகத்திற்குப் பிரயோசனமளிக்கவும் அல்லாஹ்விடம் வேண்டு

அறிமுகம்

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்... அல்லாஹ்வே! உன் படைப்புகளில் சிறந்த முஹம்மது ﷺ அவர்கள்மீது கருணை புரிவாயாக. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். எல்லாவற்றிற்கும் அவனே போதுமானவன். அவன் ஏற்றுக்கொண்ட நல்லடியார்கள்மீது நல்லருள் உண்டாவதாக. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை; அவன் தனித்தவன்; இணையில்லாதவன்; முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், தூதருமாவார் என நான் உறுதி கூறுகிறேன். எல்லாம் வல்ல அல்லாஹ் குர்ஆனில் பின்வரும் வசனங்களில் கூறுகிறான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ

விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து (உண்மையான, நேர்மையான) பொருத்தமான வார்த்தைகளையே கூறுங்கள். அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்களின் குற்றங்களையும் மன்னிப்பான். *(33:70,71)*

إِلَيْهِ يَصْعَدُ الْكَلِمُ الطَّيِّبُ وَالْعَمَلُ الصَّالِحُ يَرْفَعُهُ

(கலிமா தையிப் ஸலவாத்து போன்ற) தூய வாக்கியங்கள் அவன் பால் ஏறுகின்றன. நற்செயல்களை அவனே உயர்த்துகின்றான். *(குர்ஆன் 35:10)*

فَاذْكُرُونِي أَذْكُرْكُمْ وَاشْكُرُوا لِي

நீங்கள் என்னைத் தியானியுங்கள், நானும் உங்களை நினைத்து (அருள்புரிந்து) வருவேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்தி வாருங்கள். *(குர்ஆன் 2:152)*

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوا اللَّهَ ذِكْرًا كَثِيرًا

விசுவாசிகளே! அதிகமாக அல்லாஹ்வைத் துதியுங்கள். *(33:41)*

وَالذَّاكِرِينَ اللَّهَ كَثِيرًا وَالذَّاكِرَاتِ أَعَدَّ اللَّهُ لَهُمْ مَغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا

அல்லாஹ்வை அதிகமாகத் துதி செய்யும் ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றான். (குர்ஆன் 33:35)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِذَا لَقِيتُمْ فِئَةً فَاثْبُتُوا وَاذْكُرُوا اللَّهَ كَثِيرًا لَعَلَّكُمْ تُفْلِحُونَ

விசுவாசிகளே! நீங்கள் (யுத்தத்தின்போது எதிரியின்) கூட்டத்தைச் சந்தித்தால் (கலக்கமடையாமல்) உறுதியாக (எதிர்த்து) நின்று (அல்லாஹு அக்பர் என்று) அல்லாஹ்வின் திருநாமத்தை நீங்கள் அதிகமாகக் கூறுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள். (8:45)

الَّذِينَ يَذْكُرُونَ اللَّهَ قِيَامًا وَقُعُودًا وَعَلَى جُنُوبِهِمْ

சிலர் (தங்கள்) நிலையிலும், இருப்பிலும் தங்கள் படுக்கையிலும் அல்லாஹ்வை நினைத்து(க்கொள்வார்கள்). (குர்ஆன் 3:191)

فَإِذَا قَضَيْتُمْ مَنَاسِكَكُمْ فَاذْكُرُوا اللَّهَ كَذِكْرِكُمْ آبَاءَكُمْ أَوْ أَشَدَّ ذِكْرًا

உங்களுடைய (ஹஜ்ஜின்) கிரியைகளை நிறைவேற்றிவிட்டால் நீங்கள் (இஸ்லாத்திற்குமுன்) உங்கள் பிதாக்(களின் பெயர்)களை(ச் சப்தமிட்டு பெருமையாக)க் கூறிவந்ததைப்போல் அல்லது அதனை விடப்பலமாக(ச் சப்தமிட்டு) அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள். (குர்ஆன் 2:200)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُلْهِكُمْ أَمْوَالُكُمْ وَلَا أَوْلَادُكُمْ عَنْ ذِكْرِ اللَّهِ

விசுவாசிகளே! உங்களுடைய பொருள்களும், உங்களுடைய சந்ததிகளும் அல்லாஹ்வுடைய நினைவிலிருந்து உங்களைத் திருப்பிவிட வேண்டாம். (குர்ஆன் 64:9)

رِجَالٌ لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللَّهِ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ

பலர் இருக்கிறார்கள் (அவர்கள் எத்தகையோரென்றால்) அவர்களுடைய வர்த்தகக்கொள்வினை கொடுப்பினை முதலியவை அவர்கள் அல்லாஹ்வுடைய நாமத்தைத் துதிப்பதிலிருந்தும், ஸகாத்துக் கொடுப்பதிலிருந்தும், அவர்களைத் திருப்பிடாது. (குர்ஆன் 24:37)

وَاذْكُرْ رَبَّكَ فِي نَفْسِكَ تَضَرُّعًا وَخِيفَةً وَدُونَ الْجَهْرِ مِنَ الْقَوْلِ بِالْغُدُوِّ وَالْآصَالِ وَلَا تَكُنْ مِنَ الْغَافِلِينَ

۞ 1 ۞

அல்லாஹ்வை நினைவுகூர்வதின் சிறப்பு

۞ 1 ۞

أَلَا أُنَبِّئُكُمْ بِخَيْرِ أَعْمَالِكُمْ، وَأَزْكَاهَا عِنْدَ مَلِيكِكُمْ، وَأَرْفَعِهَا فِي دَرَجَاتِكُمْ وَخَيْرٌ لَكُمْ مِنْ إِنْفَاقِ الذَّهَبِ وَالوَرِقِ، وَخَيْرٌ لَكُمْ مِنْ أَنْ تَلْقَوْا عَدُوَّكُمْ فَتَضْرِبُوا أَعْنَاقَهُمْ وَيَضْرِبُوا أَعْنَاقَكُمْ؟ قَالُوا: بَلَى. قَالَ: 'ذِكْرُ اللَّهِ تَعَالَى

'உங்கள் செயல்களில் நல்லதும், உங்கள் ஆட்சியாளனாகிய அல்லாஹ் இடத்தில் தூய்மையானதும், உங்கள் அந்தஸ்த்தை உயர்த்தக்கூடியதும், தங்கவெள்ளி நாணயங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதைவிட மேலானதும், புனித யுத்தத்திலே நீங்கள் ஈடுபட்டு விரோதியைக் கொன்றாலோ அல்லது விரோதியினால் கொல்லப்பட்டாலோ உங்களுக்குக் கிடைக்கும் நன்மையைவிடவும் உத்தமமான ஒரு செயலைச் சொல்லித்தரட்டுமா' என நபியவர்கள் கேட்க, 'ஆம் கூறுங்கள்' என்று தோழர்கள் கூறியதும், 'அதுதான் அல்லாஹ்வைத் துதிப்பதாகும்' (திக்ரு செய்வதாகும்) என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பு: அபூ தர்தாஃ ؓ, திர்மிதீ 3377)*

۞ 2 ۞

سَبَقَ الْمُفَرِّدُونَ قَالُوا: وَمَا الْمُفَرِّدُونَ يَا رَسُولَ اللهِ؟. قَالَ: 'الذَّاكِرُونَ اللهَ كَثِيرًا وَالذَّاكِرَاتُ

'தனித்தவர்கள் முந்திவிட்டார்கள்' என நபியவர்கள் கூறியதும், 'தனித்தவர்கள் என்றால் யார்' அல்லாஹ்வின் தூதரே! எனத் தோழர்கள் வினவினார்கள். 'அல்லாஹ்வை அதிகமாகத் துதிக்கும் (திக்ருசெய்யும்) ஆண்களும் பெண்களுமாவார்கள்' என நபி ﷺ அவர்கள் பதிலளித்தார்கள். *(அபூ ஹுறைறா ؓ, முஸ்லிம் 2676)*

۞ 3 ۞

அப்துல்லாஹ் இப்னு புஸ்ர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

أَنَّ رَجُلًا قَالَ: يَا رَسُولَ اللَّهِ إِنَّ شَرَائِعَ الإِسْلَامِ قَدْ كَثُرَتْ عَلَيَّ، فَأَخْبِرْنِي بِشَيْءٍ أَتَشَبَّثُ بِهِ، قَالَ: 'لَا يَزَالُ لِسَانُكَ رَطْبًا مِنْ ذِكْرِ اللَّهِ

ஒரு மனிதர் நபியவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே! விசுவாசத்தின் பகுதிகள் அதிகமாகி என்னை வருத்துகிறது. ஏதாவது ஒரு காரியத்தைச் சொல்வீர்களாயின், அதனை நான் பிடிவாதமாக வழமைப்படுத்திக்கொள்வேன் கூறுங்கள்' என்றார். 'உன்னுடைய நாவு அல்லாஹ்வைத் துதிப்பதில் ஈரமாகவே இருக்கச் செய்வீரா' என நபி ﷺ அவர்கள் அறிவித்தார்கள். (திர்மிதீ 3375)

۞ 4 ۞

مَثَلُ الَّذِي يَذْكُرُ رَبَّهُ وَالَّذِي لَا يَذْكُرُ رَبَّهُ, مَثَلُ الْحَيِّ وَالْمَيِّتِ

'அல்லாஹ்வைத் துதிப்பவனுக்கும் துதிக்காமல் இருப்பவனுக்கும் உதாரணம் உயிருள்ளவனையும் இறந்தவனையும் போலாகும்' (துதிப்பவன் உயிருள்ளனவனைப் போன்றும் துதிக்காதவன் இறந்த வனைப் போன்றுமாவான்) என நபி ﷺ அவர்கள் நவின்றார்கள். (அறிவிப்பு: அபூ மூஸா அல்அஷ்அரீ ﷺ, புகாரீ 6407)

۞ 5 ۞

مَنْ قَعَدَ مَقْعَدَاً لَمْ يَذْكُرِ اللهَ تَعَالَى فِيهِ، كَانَتْ عَلَيْهِ مِنَ اللهِ تَعَالَى تِرَةٌ، وَمَنِ اضْطَجَعَ مَضجَعاً لاَ يَذْكُرُ اللهَ تَعَالَى فِيهِ، كَانَتْ عَلَيْهِ مِنَ اللهِ تِرَةٌ

'அல்லாஹ்வை திக்ரு செய்யாது ஓர் இடத்தில் அமர்வதும், படுக்கையில் சாய்வதும் நஷ்டமுடையதும் கவலையுடையது மாகும்' என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, அபூ தாவூது 4856, ஸஹீஹ் ஜாமிஃ 6477)

۞ 6 ۞

لاَ إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

'லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக லஹு, லஹுல் முல்கு, வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்'

۞ 2 ۞

காலை மாலை திக்ருகள்

காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வை நினைவுகூர்வதின் சிறப்புகள் குறித்து பின்வரும் வசனங்களில் காணலாம்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوا اللَّهَ ذِكْرًا كَثِيرًا وَسَبِّحُوهُ بُكْرَةً وَأَصِيلًا

விசுவாசிகளே! அதிகமாக அல்லாஹ்வை துதிசெய்யுங்கள்; காலையிலும் மாலையிலும் அவனைத் துதிசெய்து வாருங்கள். (குர்ஆன் 33:41,42)

وَاذْكُرْ رَبَّكَ فِي نَفْسِكَ تَضَرُّعًا وَخِيفَةً وَدُونَ الْجَهْرِ مِنَ الْقَوْلِ بِالْغُدُوِّ وَالْآصَالِ وَلَا تَكُنْ مِنَ الْغَافِلِينَ

(நபியே!) உம்மனத்திற்குள் மிக்க பணிவோடும், பயத்தோடும், (மெதுவாக) உரத்த குரலிலன்றியும் காலையிலும் மாலையிலும் உமது இரட்சகனின் நாமத்தை துதிசெய்துகொண்டிருப்பீராக; (அவனை) மறந்துவிட்டிருப்போரில் நீரும் இருக்காதீர். (7:205)

وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ بِالْعَشِيِّ وَالْإِبْكَارِ

சூரியோதயத்திற்கு முன்பும் (அதன்) அஸ்தமனத்திற்கு முன்பும் உம் இரட்சகனைப் புகழ்ந்து துதி செய்துகொண்டிருப்பீராக. (50:39)

وَلَا تَطْرُدِ الَّذِينَ يَدْعُونَ رَبَّهُمْ بِالْغَدَاةِ وَالْعَشِيِّ

(நபியே) தங்கள் இரட்சகனின் பொருத்தத்தை விரும்பி காலையிலும் மாலையிலும் பிரார்த்தித்துவருவோரை நீர் விரட்டாதீர். (6:52)

فَأَوْحَى إِلَيْهِمْ أَنْ سَبِّحُوا بُكْرَةً وَعَشِيًّا

காலையிலும் மாலையிலும் (அல்லாஹ்வைப்) புகழ்ந்து துதி செய்யுங்கள் என்று (தன்கையால் நபி ஜக்கரிய்யா) அவர்களுக்கு

சைக்கினை காண்பித்தார். *(19:11)*

وَمِنَ اللَّيْلِ فَسَبِّحْهُ وَأَدْبَارَ السُّجُودِ

இரவின் ஒரு பாகத்திலும் நட்சத்திரங்கள் மறையும் (காலை) நேரத்திலும் அவனைத் துதி செய்துகொண்டிருப்பீராக. *(52:49)*

فَسُبْحَانَ اللَّهِ حِينَ تُمْسُونَ وَحِينَ تُصْبِحُونَ

(விசுவாசிகளே) நீங்கள் பொழுது புலரும் போதும் பொழுது சாயும்போதும் அல்லாஹ்வைத் துதி செய்துகொண்டிருங்கள். (குர்ஆன் *30:17*)

وَأَقِمِ الصَّلَاةَ طَرَفَيِ النَّهَارِ وَزُلَفًا مِنَ اللَّيْلِ إِنَّ الْحَسَنَاتِ يُذْهِبْنَ السَّيِّئَاتِ

பகலின் இரண்டு முனை(களாகிய காலை, மாலை)களிலும் இரவின் நிலைகளிலும் நீங்கள் (தவறாது) தொழுது வாருங்கள்; நிச்சயமாக நன்மைகள் பாவங்களைப் போக்கிவிடும்; (அல்லாஹ்வை) நினைவுகூர்வோருக்கு இதுவோர் நல்லுபதேசமாகும். *(11:114)*

۞ 16 ۞

யாராவது காரையிலும் மாலையிலும்

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ

‘ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி’

அல்லாஹ்வின் புகழைக் கொண்டு துதி செய்கிறேன்

என நூறு விடுத்தம் கூறுவானாயின், மறுமையில் பெரும் நன்மை களைச் செய்தவனாக வருவான். எனினும் வேறு யாராவது இந்தளவு அல்லது இதைவிட அதிகமாகக் கூறியிருந்தாலே தவிர என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, முஸ்லிம் *2692)*

۞ 17 ۞

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மாலையானவுடன்,

أَمْسَيْنَا وَأَمْسَى الْمُلْكُ لِلَّهِ، وَالْحَمْدُ لِلَّهِ لَا إِلَهَ إِلَّا اللهُ، وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، رَبِّ أَسْأَلُكَ خَيْرَ مَا فِي هَذِهِ اللَّيْلَةِ وَخَيْرَ مَا بَعْدَهَا، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا فِي هَذِهِ اللَّيْلَةِ وَشَرِّ مَا بَعْدَهَا، رَبِّ أَعُوذُ بِكَ مِنَ الْكَسَلِ وَسُوءِ الْكِبَرِ، رَبِّ أَعُوذُ بِكَ

۞ 20 ۞

ஸய்யிதுல் இஸ்திக்ஃபார் – பாவமன்னிப்பின் தலைமைப் பிரார்த்தனை

اللَّهُمَّ أَنْتَ رَبِّي، لا إِلَهَ إِلا أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ، وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ، وَأَبُوءُ بِذَنْبِي، فَاغْفِرْ لِي، فَإِنَّهُ لا يَغْفِرُ الذُّنُوبَ إِلا أَنْتَ

‘அல்லாஹும்ம அன்த ரப்பீ, லா இலாஹ இல்லா அன்த, கலக்தனீ, வஅன அப்துக, வஅன அலா அஹ்திக, வவஅதிக மஸ்ததஅது, அஊது பிக மின் ஷர்ரி மா ஸனஅது, அபூஉ லக பினிஅமதிக அலைய, வஅபூஉ பிதன்பீ, ஃபங்ஃபிர் லீ, ஃபஇன்னஹு லா யங்ஃபிருத் துனூப இல்லா அன்த’

அல்லாஹ்வே! நீயே என் இரட்சகன்; உன்னைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை; நீ என்னைப் படைத்தாய்; நான் உனது அடிமை; நான் உனக்களித்த வாக்குறுதியின்மீது நிலைத்திருக்கிறேன்; உன்வாக்கையும் நம்பியிருக்கிறேன்; என்னால் இயன்றவரை நான் உனக்குப் பணிந்து நடக்கிறேன்; நான் செய்த கெட்ட செயல்களையிட்டு உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்; நீ எனக்களித்த அருட்கொடைகளையெல்லாம் ஒப்புக்கொள்கிறேன்; நான் செய்த பாவங்களையும் ஒப்புக்கொள்கிறேன். எனவே, என் குற்றங்களை மன்னித்தருள். பாவங்களை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை.

இந்தப் பிரார்த்தனையை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் பகலில் கூறிவிட்டு அதே நாளில் மாலை நேரத்திற்கு முன்பாக இறந்துவிடுபவர் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார். இதை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் இரவில் கூறிவிட்டுக் காலை நேரத்திற்கு முன்பே இறந்துவிடுகிறவரும் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார் என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பு: ஷத்தாது இப்னு அவ்ஸ் ؓ, புகாரீ 6306)*

۞ 15 ۞

கஷ்டம், கவலை, துக்கம் ஏற்பட்டால் ஓதுபவை



۞ 99 ۞

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டால் பின்வரும் துஆவை ஓதுவார்கள்.

لاَ إِلَهَ إِلَّا اللَّهُ العَظِيمُ الحَلِيمُ، لاَ إِلَهَ إِلَّا اللَّهُ رَبُّ العَرْشِ العَظِيمِ، لاَ إِلَهَ إِلَّا اللَّهُ رَبُّ السَّمَوَاتِ وَرَبُّ الأَرْضِ، وَرَبُّ العَرْشِ الكَرِيمِ

‘லா இலாஹ இல்லல்லாஹு ரப்புல் அர்ஷில் அளீமி, லா இலாஹ இல்லல்லாஹு ரப்புஸ்ஸமாவாதி, வரப்புல் அர்ளி, வரப்புல் அர்ஷில் கரீம்’

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை அவன் பொறுமையும், மகிமையுமுள்ளவன். வணக்கத்துக்குரியவன் மகத்துவமுள்ள அர்ஷின் அதிபதியாகிய அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை. அவன் வானங்கள் பூமி கண்ணியமிக்க அர்ஷு ஆகியவற்றின் இரட்சகனாக இருக்கின்றான். (அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ﷺ, புகாரீ 6346)

۞ 100 ۞

நபி ﷺ அவர்களுக்கு ஏதாவதொரு காரியத்தில் கவலை ஏற்பட்டால்

يَا حَيُّ يَا قَيُّومُ، بِرَحْمَتِكَ أَسْتَغِيثُ

யா ஹையு யா கய்யூமு பிரஹ்மதிக அஸ்தஃபீசு

நித்தியஜீவியே! என்றும் நிலையானவனே! உன் அருளைக் கொண்டே நான் அபயம் தேடுகிறேன்

என்று கூறுவார்கள். (அறிவிப்பு: அனஸ் ؓ, திர்மிதீ 3524)[5]

۞ 101 ۞

اللَّهُمَّ رَحْمَتَكَ أَرْجُو, فلَا تَكِلْنِي إِلَى نَفْسِي طَرْفَةَ عَيْنٍ, وَأَصْلِحْ لِي شَأْنِي كُلَّهُ, لَا إِلَهَ إِلَّا أَنْتَ

'அல்லாஹும்ம ரஹ்மதக அர்ஜூ, ஃபலா தகில்னீ இலா நஃப்ஸீ தர்ஃபத ஐனின், வஅஸ்லிஸ் லீ ஷஃனீ குல்லஹு, லா இலாஹ இல்லா அன்த'

அல்லாஹ்வே! உன் அருளையே நம்பியுள்ளேன். கணமேனும் நான் என் விருப்பத்தின்படி நடக்க நீ விட்டுவிடாதே. என் எல்லாக் காரியங்களையும் சீர்படுத்துவாயாக. உன்னைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை.

'துன்பப்படுவோன் துஆ என அழைக்கப்படும் பிரார்த்தனை இதுதான்' என நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ பக்ரா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள். (அபூ தாவூது 5090)

۞ 102 ۞

உமைஸ் உடைய மகள் அஸ்மா ؓ அவர்களிடம் துயரத்தின்போது ஓதவேண்டியதை உனக்குச் சொல்லித் தரட்டுமா எனக் கேட்டுவிட்டு

أَللَّهُ أَللَّهُ رَبِّي لَا أُشْرِكُ بِهِ شَيْئًا

'அல்லாஹ் அல்லாஹ் ரப்பீ லா உஷ்ரிகு பிஹி ஷைஆ'

அல்லாஹ் அல்லாஹ் உனக்கு எதையும் இணையாக்கமாட்டோம்

எனக் கூறுவாயாக என்று நபி ﷺ அவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். (அபூ தாவூது 1525) இன்னோர் அறிவிப்பின்படி இதை ஏழு முறை கூறும்படிப் பணித்தார்கள்.

۞ 103 ۞

எந்தவொரு முஸ்லிமாவது யூனுஸ் ؑ அவர்கள் மீனின் வயிற்றிலிருக்கும்போது ஓதிய துஆவை ஓதி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தால்

---

5 அனஸ் இப்னு மாலிக் ؓ அறிவித்து முஸ்தத்ரிக், திர்மிதீ திர்மிதீயில் இடம்பெறும் இந்நபிமொழி பலஹீனமானது. முஸ்தத்ரிகில் சரியான அறிவிப்பாளர் வரிசையிலுள்ளது.